ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
வளமான வாழ்க்கையை உருவாக்கு

## கடன் கொடுப்பவர்களுக்கான நியாயமான நெறிமுறைகள்

| | |
|---|---|
| நடைமுறைக்கு வந்த தேதி | பிப்ரவரி 01, 2018 |
| ஒப்புதல் அளித்தது | நிர்வாகம் / நிர்வாகக் கமிட்டி |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் | ஏப்ரல் 28, 2022 |
| கொள்கை வகுப்பாளர் | தேசிய மேலாளர் - சேவைத் தரம் |
| மறுஆய்வுக் காலம் | ஆண்டுதோறும் |

இந்த ஆவணம் உள் அலுவலகப் பயன்பாட்டுக்கு மட்டுமே. உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்-ன் அனுமதி பெறாமல் இந்த ஆவணத்தை வேறு எந்த வடிவத்திலும் மறுஉருவாக்கம் செய்யக்கூடாது.

## உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்-ன் கடன் கொடுப்பவர்களுக்கான நியாயமான செயல்பாட்டுத் குறிப்புகள் (”நியாயமான செயல்பாட்டுக் குறிப்புகள்”)

உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்-ன் ("வங்கி") தெளிவான செயல்பாட்டுக் குறிப்புகள், வங்கியில் கடன் வாங்குபவர்களுக்கு, வங்கியுடனான அவர்களுடைய பரிவர்த்தனைகள் குறித்து வெளிப்படைத்தன்மையையும் தெளிவையும் வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளன. இந்தச் செயல்பாட்டுக் குறிப்புகள், வங்கியின் உள்நாட்டு வங்கிச் சேவையோடு மட்டுமே தொடர்புடையவை.

தனது அனைத்துப் பயனாளர்கள் / வாடிக்கையாளர்களை நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்த வேண்டும் என்பதுதான் வங்கியின் கொள்கை. வங்கி ஊழியர்களும், பயனாளர்கள் / வாடிக்கையாளர்களுக்குத் தேவையான அனைத்து வகையான உதவிகளையும், ஊக்கத்தையும் மற்றும் சேவையையும் நியாயமான முறையிலும், சமநோக்கோடு நீடித்த வகையிலும் வழங்குவார்கள். வங்கியின் தெளிவான செயல்பாட்டுக் குறிப்புகள் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும், வங்கியின் கிளைகளிலும், www.ujjivansfb.in (இணையத்தளம்) என்ற வங்கியின் இணையத்தளத்திலும் கிடைக்கும்.

### பாரபட்சமற்ற கொள்கை

வங்கி தனது வாடிக்கையாளர்களிடையே ஜாதி, மதம், இனம், மொழி, நிறம், திருமணம் ஆனவரா இல்லையா, வயது, நிதி நிலைமை, உடல் ஊனம் குறித்து எந்தவிதப் பாகுபாடும், பாரபட்சமும் பார்ப்பதில்லை.

### நேரடி விற்பனை முகவர்களுக்கான ("DSAs") நடத்தை விதிகள்

வங்கியானது, நேரடி விற்பனை முகவர்களுக்கான (DSA) கீழ்க்கண்ட நடத்தை விதிகளை உருவாக்கியிருப்பதுடன், அதை நேரடி விற்பனை முகவர்களுக்கான ஒப்பந்தத்திலும் சேர்த்திருக்கிறது. கடன் கொடுப்பது குறித்த வங்கியின் கொள்கைப்படி, டிஜிட்டல் ஃபின்டெக் பங்குதாரர்கள் மூலம் வழங்கப்படும் கடன்களும் நேரடி விற்பனை முகவர்கள் (DSA) என்ற பிரிவின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளதால், கீழ்க்கண்ட நடத்தை விதிமுறைகள் மின்னணு முறையில் கடன் வழங்கும் வங்கியின் ஃபின்டெக் பங்குதாரர்களுக்கும் பொருந்தும். தற்போதைய வணிக நடைமுறைக்கு இணையாக IBA உருவாக்கிய நேரடி விற்பனை முகவர்களுக்கான நடத்தை விதிமுறைகளை வங்கி ஏற்று செயல்படுத்தியுள்ளது. வர்த்தக ரீதியான நடவடிக்கைகளில் வங்கி ஈடுபடும்போது, அவற்றுக்கு ஏற்ப நடத்தை விதிமுறைகளின் மற்ற அம்சங்கள் செயல்படுத்தப்படும்.

● பின்வரும் சூழ்நிலைகளின்போது மட்டுமே, வங்கியில் கடன் வாங்க விரும்பும் ஒரு வாடிக்கையாளரைத் தொடர்புகொள்ள வேண்டும்:

- வங்கி இணையத்தளம் அல்லது வங்கியின் கால் சென்டரிலிருந்து அழைப்பு அல்லது வங்கியின் கிளை அல்லது வங்கியின் ரிலேஷன்ஷிப் மேனேஜர் அல்லது வங்கியின் வாடிக்கையாளர் அல்லது கடன் வாங்க விரும்பும் நபர் அல்லது வங்கி சார்பாக அழைப்புகளை ஏற்றுக்கொள்ள ஒப்புதல் அளித்த வாடிக்கையாளர் அல்லது வங்கியின் வேறு ஏதாவது சேவையைப் பெற்றவர் என்ற அடிப்படையில் வங்கியிலிருந்து கடன் பெற விருப்பம் தெரிவித்திருந்தால்.

- கடன் பெற விருப்பம் தெரிவித்தவருடைய பெயர் / தொலைபேசி எண் / முகவரி ஆகியவை வங்கியிடம் இருந்தால், குழுத் தலைவர் / நேரடி விற்பனை முகவர்களின் (DSA) மேலாளர் ஒப்புதல் அளித்த வங்கியின் பட்டியல் / கோப்புகள் / டேட்டாபேஸ் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டிருந்தால், தொடர்புடைய நபரின் விருப்பத்தைத் தெரிந்துகொண்ட பிறகு.

- கடன் பெற விருப்பம் தெரிவித்தவர், வங்கியின் App மூலம் ஃபின்டெக், இணையத்தளம், நேரடியாக, தொடர்பு மையம் அல்லது வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்புக்காக வங்கி செய்திருக்கும் ஏற்பாடு அல்லது வாய்ப்புகளை சொந்த விருப்பத்தின் பேரில் அணுகினால்.

● நேரடி விற்பனை முகவர்களிடம் (DSA) இருக்கும் பட்டியலில் "தொந்தரவு செய்ய வேண்டாம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் எந்த ஒரு நபரையோ / நிறுவனத்தையோ நேரடி விற்பனை முகவர்கள் (DSA) தொடர்புகொள்ளவே கூடாது.

● தொலைபேசி மூலம், பொதுவாக காலை 09:30 மணி முதல் இரவு 19:00 மணிக்குள்ளாகத் தொடர்புகொள்ள வேண்டும். இருப்பினும், இந்தத் தொலைபேசி அழைப்பு தொடர்புடைய நபருக்கு எந்தவிதத்திலும் தொந்தரவாக இருக்காது என்பதை உறுதி செய்த பிறகே மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பிட்ட கால நேரத்துக்கு (மேலே உள்ளபடி) முன்போ அல்லது பிறகோ தொடர்புகொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டால், அது குறித்து வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ நேரடி விற்பனை முகவரிடம் (DSA) தெரிவித்திருந்தால் மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும்.

● வங்கியில் கடன் வாங்க விரும்புவரின் தனியுரிமையை நேரடி விற்பனை முகவர்கள் (DSA) மதிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட நபரின் விருப்பம் என்ன என்பது, அவருடன் மட்டுமோ மற்றும் அவர் பரிந்துரைத்த அவருடைய கணக்காளர் / தனிச் செயலாளர் / மனைவி போன்ற யாராவது ஒரு நபர் / குடும்ப உறுப்பினரிடமோ கலந்தாலோசிக்கப்படும்.

● கடன் வாங்க விரும்பும் நபரிடம் இருந்து நேரடி விற்பனை முகவர்கள் (DSA) எந்த வகையிலும் லஞ்சம் பெறக் கூடாது. தொழில் வளர்ச்சிப் பிரதிநிதிக்கு (BDE) சம்பந்தப்பட்ட நபர் லஞ்சமோ அல்லது வேறு எந்த வகையிலோ பணம் கொடுக்க விரும்பினால், அது குறித்து உடனடியாக நிர்வாகத்திடம் தெரியப்படுத்த வேண்டும்.

● கடன் வாங்க விரும்பும் நபரிடம் நேரடி விற்பனை முகவர்கள் (DSA) பேசும்போது, அவர்கள் வங்கி சார்பாக மட்டுமே அவர்களிடம் பேசுவதாகவும், எந்தக் கடன் வழங்கப்பட்டாலும், அது வங்கியால் மட்டுமே வழங்கப்படுவதாகவும் தெரிவிக்க வேண்டும்.

● வாடிக்கையாளர்களிடம் இருந்து கடன் நிலுவைத் தொகையை வசூலிக்குப் பணியில் ஈடுபடும் நேரடி விற்பனை முகவர்களுக்கு (DSA) பயிற்சியும், நிலுவை வைத்திருக்கும் வாடிக்கையாளரை எவ்வாறு கையாள வேண்டும் என்று வங்கி ஊழியர் / ஏஜெண்டுகளுக்கான கல்வி மற்றும் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர் மிகுந்த மரியாதையுடன்தான் நடத்தப்படுகிறார் என்பதை உறுதி செய்யும்விதமாக, உள்அலுவலகக் கொள்கைகளும், நடைமுறைகளும் வகுக்கப்பட வேண்டும்.

● கடன் விண்ணப்பத்தைப் பரிசீலித்தல், கடன் தவணை வசூலித்தல், கடன் நிலுவை வைத்திருக்கும் வாடிக்கையாளரிடம் இருந்து நிலுவைத் தொகையை வசூலித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டிருக்கும் வங்கி ஊழியர்கள் / ஏஜெண்டுகள், நேரடி விற்பனை முகவர்கள் (DSA) பரிந்துரைத்த (IBA-வின் நடத்தை விதிமுறைகளை ஒத்தது) நடத்தை விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்ற உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட வேண்டும்.

● கணக்கு வழக்குகளைக் கையாளுவதிலும், பராமரிப்பதிலும் / தகுதிவாய்ந்த தணிக்கையாளர் அல்லது தணிக்கையாளர்கள் மற்றும் வங்கிக்கு நிதிநிலை அறிக்கையை தெரியப்படுத்தும்போது வெளிப்படைத்தன்மையை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

● வங்கியின் அனைத்துச் சேவைகள் குறித்தும் முழுமையாக அறிந்துவைத்திருக்க வேண்டும்.

● நேரடி விற்பனை முகவர்கள் (DSA) செய்யக்கூடாதவை -

- வங்கி அளிக்கும் சேவைகள் அல்லது கடன் திட்டங்கள் குறித்து கடன் பெற விரும்பும் நபருக்குத் தவறான தகவல் அளித்தல்;

- கடன் பெற விரும்பும் நபரின் தொழில் அல்லது நிறுவனத்தின் பெயரை அல்லது அவர்கள் சார்பாக தங்களை தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்திக்கொள்ளுதல்;

- வங்கியின் சேவை அல்லது திட்டங்கள் குறித்து வங்கி சார்பாக பொய்யான / தவறான உறுதிமொழியை அளித்தல்.

● வாடிக்கையாளரைச் சந்திக்கும்போது / தொடர்புகொள்ளும்போது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்.

நேரடி விற்பனை முகவர் (DSA) செய்ய வேண்டியது:

- கடன் வாங்க விரும்புபவரிடம் இருந்து சற்று விலகியே இருக்க வேண்டும். அவருடைய தனிப்பட்ட விருப்பத்துக்கு மதிப்பு தர வேண்டும்;

- சம்பந்தப்பட்ட நபரின் விருப்பம் இல்லாமல் அவருடைய வீட்டுக்கோ அல்லது அலுவலகத்துக்கோ செல்லக் கூடாது;

- அதிக நபர்களாகச் சேர்ந்து செல்லக் கூடாது - அதாவது, தேவைப்பட்டால் தொழில் வளர்ச்சிப் பிரதிநிதி (BDE) மற்றும் ஒரு சூப்பர்வைசருக்கு மேல் செல்லக் கூடாது;

- சம்பந்தப்பட்ட நபரின் தனிமனித சுதந்திரத்தை மதிக்க வேண்டும்.

- நேரடி விற்பனை முகவர் (DSA) செல்லும்போது, சம்பந்தப்பட்ட நபர் இல்லாமல், அவருடைய குடும்ப உறுப்பினர்களோ / அலுவலக ஊழியர்களோ இருந்தால், அவர்களிடம் சம்பந்தப்பட்ட நபரை வங்கியைத் தொடர்புகொள்ளச் சொல்லிவிட்டு திரும்பிவிட வேண்டும்.

- வாடிக்கையாளர் கேட்டுக்கொண்டால், தன்னுடைய தொலைபேசி எண், சூப்பர்வைசரின் பெயர் அல்லது சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரியின் தொடர்பு விவரங்களைக் கொடுக்க வேண்டும்.

- சம்பந்தப்பட்ட நபருடன் தொழில்ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும் - வங்கிச் சேவை குறித்து தேவையான தகவல்களை மட்டும் தெரிவித்தால் போதுமானது.

- நேரடி விற்பனை முகவர் (DSA) மூலம் சம்பந்தப்பட்ட நபருக்கு அனுப்பப்படும் எந்த ஒரு தகவலும், வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட முறையிலும் வடிவத்திலும் மட்டுமே இருக்க வேண்டும்.

**டிஜிட்டல் கடன் வழங்கு தளங்கள் மூலம் வங்கி வழங்கும் கடன் திட்டங்கள்:**

ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கையின் அடிப்படையில், டிஜிட்டல் கடன் வழங்கு தளங்கள் (Digital Lending Platforms) மூலம் வங்கிகள் மற்றும் வங்கிசாரா நிதி நிறுவனங்களால் (NBFC) கொடுக்கப்படும் கடன்கள் - 2020, ஜூன் 24-ம் தேதியிட்ட தெளிவான செயல்பாட்டுக் குறிப்புகள் மற்றும் அவுட்சோர்ஸிங் வழிகாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டும். வங்கி, அது தன்னுடைய சொந்த டிஜிட்டல் கடன் வழங்கு தளங்கள் மூலம் அல்லது வெளிப்புற டிஜிட்டல் கடன் வழங்கு தளங்கள் மூலம் கடன் வழங்குவதாக இருந்தாலும், நடைமுறையில் உள்ள தெளிவான செயல்பாட்டுக் குறிப்புகளை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும், கடன் வழங்க வெளிப்புற நிதிச் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பச் (IT) சேவைகளைப் பயன்படுத்துவதாக இருந்தாலும் ஒழுங்குமுறை வழிமுறைகளை சீரிய முறையில் பின்பற்ற வேண்டும்.

கடன் வாங்க விரும்புபவர்களை வாடிக்கையாளராகப் பெறவோ, மற்றும் / அல்லது கடன் நிலுவையைத் தொகையைப் பெறவோ டிஜிட்டல் கடன் வழங்கு தளங்களைத் தன்னுடைய முகவர்களாக வங்கி நியமிக்கும்பட்சத்தில், பின்வரும் வழிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்:

a) முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள டிஜிட்டல் கடன் வழங்கு தளங்களின் பெயர்களை சம்பந்தப்பட்ட வங்கியின் இணையத்தளத்தில் வெளியிட வேண்டும்.

b) முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள டிஜிட்டல் கடன் வழங்கு முறைகள், எந்த வங்கியின் சார்பாக தொடர்புகொள்கிறோம் என்பதை வாடிக்கையாளரிடம் முன்கூட்டியே தெரியப்படுத்த வேண்டும்.

c) கடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட உடனே, ஆனால் கடன் ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கு முன், கடன் வழங்க ஒப்புதல் கடிதம் (Sanction Letter) அந்த வங்கியின் லெட்டர் ஹெட் மூலம் சம்பந்தப்பட்ட நபருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

d) கடன் தொகையைக் கொடுக்கும்போது / கடன் வழங்க ஒப்புதல் அளிக்கும்போது, கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து ஆவணங்களின் நகல்களையும் கடன் ஒப்பந்தத்தின் நகலுடன் இணைத்து கடன் வாங்கும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வழங்க வேண்டும்.

e) வங்கியால் நியமிக்கப்பட்டுள்ள டிஜிட்டல் கடன் வழங்கும் தளங்களின் செயல்பாட்டை சீரிய முறையில் கண்காணிப்பதும், மேற்பார்வையிடுவதும் உறுதி செய்யப்பட வேண்டும்.

f) வாடிக்கையாளர் குறை தீர்க்கும் நடைமுறைகள் குறித்து வாடிக்கையாளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**கடன் விண்ணப்பப் படிவம் மற்றும் ஒப்பந்தம்**

கடன் வாங்குபவர் எந்த அளவுக்குக் கடன் கேட்டுள்ளார் (சிறிய தொகையோ, பெரிய தொகையோ) என்பதைக் கருத்தில் கொள்ளாமல், அனைத்து வகையான கடன்களுக்கும் ஏற்ற வகையில் கடன் விண்ணப்பப் படிவம் விரிவாகவும் விவரமாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். கடன் கோருபவர், தேவைப்படும் ஆணவங்களைச் சேர்த்துக் கொடுக்க வசதியாக, கடன் விண்ணப்பப் படிவத்துடன் என்னென்ன ஆவணங்கள் (சட்டம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்காக) இணைக்கப்பட வேண்டும் என்பதற்கான ஒரு பட்டியலையும் சம்பந்தப்பட்ட நபருக்கு வங்கி கொடுக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட நபருக்கு தொலைபேசி மூலம் கடன் கொடுக்க / ஒப்புதல் அளிக்க வங்கி விரும்பினால், அவரிடம் இருந்து எழுத்து மூலமாக ஒப்புதலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மின்னணு முறை மூலம் / தேவையான சரிபார்த்தலுக்குப் பிறகு அவருடைய சம்மதமோ பெற்ற பிறகு, சம்பந்தப்பட்ட நபரின் வங்கிக் கணக்கில் கடன் தொகை நேரடியாக வரவு வைக்கப்பட வேண்டும். கேட்கப்படாத முன் அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதியை எந்த வகையிலும் வங்கி ஒருபோதம் வழங்காது.

கடன் விண்ணப்பத்தைப் பரிசீலிக்க எவ்வளவு காலம் ஆகும் என்பதை வெளிப்படையாகத் தெரிவிப்பதுடன், பெறப்படும் அனைத்து கடன் விண்ணங்களையும் ஏற்றுக்கொண்டு அதற்கு ஒப்புகைச் சீட்டு வழங்கும் வசதியையும் வங்கி கொண்டிருக்க வேண்டும்.

**கடன் மதிப்பீடு மற்றும் பரிசீலனை**

வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட கடன் விண்ணப்பங்களை சரியான முறையில் வங்கி மதிப்பீடு செய்ய வேண்டும். மேம்போக்கான மற்றும் பாதுகாப்பு அடிப்படையில் மட்டும் பார்க்காமல், இன்னொரு வாய்ப்பாக, சம்பந்தப்பட்ட நபரின் கடன் மதிப்பீட்டு அளவின் அடிப்படையில் கூடுதல் கவனத்துடன் மதிப்பீடு செய்ய வேண்டும். சம்பந்தப்பட்ட நபருக்கு, கடன் வரம்பின் அளவு எவ்வளவு என்பதை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் வங்கி தெரியப்படுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட நபருடன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், கடன் வசதி தொடர்பான மற்ற பிற சட்ட நெறிமுறைகள் குறித்து தெளிவாக விளக்கிய பிறகு, அவை வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எழுத்து மூலமாகவும் சான்றளிக்கப்படும். கடன் தொடர்பான அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் கடன் பெறுபவருடைய அறிவுக்கு உட்பட்டு முழுமையாக ஏற்றுக்கொள்ளதை வங்கி பதிவு செய்துகொள்ளும்.

கூட்டமைப்பு ஒப்பந்தத்தின்படி கடன் வழங்குவதாக இருந்தால், சாத்தியமான முறையில் குறிப்பிட்ட காலத்துக்குள் கடன் விண்ணப்பத்தைப் பரிசீலித்து மதிப்பீடு செய்து முடிப்பதற்கான செயல்திட்டத்தை கடன் வழங்குபவர்கள் மேற்கொள்ள வேண்டும், மேலும் கடன் கொடுப்பது அல்லது வேறு எதாவது முடிவாக இருந்தால் அதை நியாயமான காலத்துக்குள் சம்பந்தப்பட்ட நபருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

**கடன் விண்ணப்பங்கள் குறித்த தகவல்களை கடன் தகவல் நிறுவனங்களுடன் பகிர்ந்துகொள்ளுதல்**

கடன் விண்ணப்பங்கள் பரிசீலனையில் கடன் தகவல் நிறுவனங்களின் (CIC) பங்கு என்ன என்பதை வாடிக்கையாளருக்கு வங்கி விளக்குவதுடன், விண்ணப்பதாரர் குறித்து கடன் தகவல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே சம்பந்தப்பட்ட நபருக்குக் கடன் வழங்குவது குறித்து முடிவு எடுக்கப்படும் என்பதையும் தெரியப்படுத்த வேண்டும்.

கடன் தகவல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தகவல் அறிக்கையின் நகலை விண்ணப்பதாரர் கோரும்பட்சத்திலும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியிருந்தாலும், சம்பந்தப்பட்ட நபருக்கு வங்கி வழங்கலாம்.

தன்னிடம் கடன் வாங்கியுள்ள வாடிக்கையாளர்களின் கடன் தகவல்களை கடன் தகவல் நிறுவனத்திடம் குறிப்பிட்ட கால இடைவெளியில் வங்கி தெரிவிக்க வேண்டும். மேலும், கடன் தவணையைச் செலுத்துவதில் ஏதேனும் நிலுவை இருந்தாலும் அது குறித்தும் தகவல் தெரிவிக்க வேண்டும். அப்போதுதான், சம்பந்தப்பட்ட நபரின் கடன் கணக்கை அடுத்த அறிக்கையில் முறைப்படுத்தவும் புதுப்பிக்கவும் முடியும்.

**கடன் குறித்த முடிவுகளுக்கான காலக்கெடு**

பெறப்பட்ட கடன் விண்ணப்பங்கள் மீது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் (ரூ.20 லட்சம் வரையிலான கடன் விண்ணப்பத்தைப் பெற்ற 30 வேலை நாட்களுக்குள்) முடிவு எடுக்க வரையறுக்கப்பட்ட நடைமுறைகளையும் மேலும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் விண்ணப்பங்களை மறுபரிசீலனை செய்ய தகுந்த மேற்பார்வை முறையையும் வங்கி கொண்டிருக்க வேண்டும். விண்ணப்பங்களைப் பரிசீலித்து கடன் மீதான தன்னுடைய முடிவுகளை இணையத்தளம், நோட்டீஸ் போர்டுகள், சேவைகள் குறித்த குறிப்பேடு, மற்றும் இவைபோன்ற வேறு ஏதாவது வகையில் அறிவிக்க தகுந்த ஏற்பாடுகளை வங்கி செய்துகொள்ள வேண்டும்.

நியாயமான காலக்கெடுவுக்குள் கடன் விண்ணப்பங்களை சரிபார்ப்பதுடன், கூடுதல் தகவல்கள் / ஆவணங்கள் தேவைப்பட்டால் அதுகுறித்து சம்பந்தப்பட்ட நபருக்கு உடனடியாகத் தெரிவிக்கவும் வேண்டும்.

கடன் நிராகரிக்கப்படும் பட்சத்தில், கடன் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான முக்கியக் காரணம் / காரணங்களை குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ குறிப்பிட்ட காலத்துக்குள் எழுத்துப்பூர்வமாகத் தெரியப்படுத்த வேண்டும். ஃபின்டெக் மூலமான டிஜிட்டல் கடன் நிராகரிக்கப்பட்டால், அது தொடர்பான தகவல்கள் வங்கி மூலமாக வாடிக்கையாளருக்கு நேரடியாகத் தெரியப்படுத்த வேண்டும் அல்லது ஃபின்டெக் கடன் வழங்குபவர் மூலமாகவோ (வங்கிக்கும் ஃபின்டெக் கடன் வழங்குபவருக்கும் இடையே பரஸ்பரம் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி) தெரியப்படுத்த வேண்டும்.

**கடன் ஒப்புதல் அளிக்க பின்பற்ற வேண்டிய நடைமுறை**

எந்த ஒரு கடனுக்காகவும் செக்யூரிட்டியாகவோ / பிணையமாகவோ பெறப்பட்ட அனைத்து ஆவணங்களுக்கும் எழுத்துப்பூர்வமாக ரசீதை வங்கி வழங்க வேண்டும். விவசாயம் சார்ந்த ரூ.1.6 லட்சம் வரையிலான கடன்களுக்குப் பிணையம் தர வேண்டும் என்று வங்கி வலியுறுத்தக் கூடாது. மேலும், நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான (MSE Sector) ரூ.10 லட்சம் வரையிலான கடன்களுக்கும் பிணையத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது. கடன் வழங்கும்போது, கொடுக்கப்படும் கடன் தொகை, செலுத்துவதற்கான காலம், தவணைக் காலம் போன்ற கடனை திருப்பிச் செலுத்துவது தொடர்பான

விவரங்களை விளக்கிச் சொல்ல வேண்டும். மேலும், தவணைத் தொகையை வசூலிப்பதற்கான வரையறுக்கப்பட்ட செயல்முறையையும் வங்கி பெற்றிருக்க வேண்டும். வட்டி விகிதம் மாறும்போது, சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணைத் தொகை (EPIs) மாறாமல், கடன் தவணைக் காலத்தை மாற்றிக்கொள்ள அல்லது கடன் தவணைக் காலத்தை மாற்றாமல் சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணைத் தொகையை மாற்றிக்கொள்ளவோ வாடிக்கையாளருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். கடன்கள் மீதான வட்டி விகிதம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதை வங்கி தெளிவுபடுத்த வேண்டும்.

கடனுக்கான ஒப்புதல் அளிக்கும்போது / கடன் தொகையை ரிலீஸ் செய்யும்போது, கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி பெறப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகலை கடன் ஒப்பந்த நகலுடன் வங்கி கொடுக்க வேண்டும். எதிர்காலத்தில் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொண்டு கடன் தேவைப்படும்பட்சத்தில், தொடர்புடைய வாடிக்கையாளருக்குக் கடன் கொடுக்கலாமா என்பது வங்கியின் முடிவுக்கு உட்பட்டது என்பதும், கடன் கொடுக்க வேண்டும் என்ற எந்தக் கடமையும் இல்லை என்பதும் கடன் ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். வாடிக்கையாளரும் உஜ்ஜீவன் வங்கியும் கையொப்பமிட வேண்டிய கடன் ஒப்பந்தங்களுக்கு டிஜிட்டல் கையொப்ப வசதியை வங்கி பயன்படுத்திக்கொள்ளலாம். இதற்கு ஏதேனும் விதிவிலக்குகள் இருந்தால், அது முறையான சட்டப்பூர்வமான காரணங்களுடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும். வாடிக்கையாளர் கோரினால், வருடாந்திர நிதிக்கணக்கு அறிக்கையை வங்கி அளிக்க வேண்டும்.

கடன் ஒப்புதல் ஆவணங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டிருப்பதைத் தவிர, கடன் பெறுவரின் எந்த விவகாரத்திலும் வங்கி ஒருபோதும் தலையிடாது. (கடன் பெறுபவர் ஏற்கெனவே தெரிவிக்காத புதிய தகவல் எதாவது இருந்து அது வங்கிக்குத் தெரியவந்தால் மட்டுமே வங்கி தலையிடும்).

**வாடிக்கையாளருடன் வெளிப்படையான மற்றும் நேர்மையான செயல்பாடு**

வங்கி தனது விளம்பரம் மற்றும் தொழில் மேம்பாடு மற்றும் விரிவாக்கத்துக்காக வெளியிடும் குறிப்பேடுகள் தெளிவாக இருப்பதுடன், மக்களுக்குத் தவறான புரிதலைக் கொடுக்காதவையாகவும் இருக்க வேண்டும். கடன் கேட்டு விண்ணப்பிக்கும் நபர்களுக்கு, தன்னுடைய கடன் திட்டங்கள், சேவைகள், விதிமுறைகள், நிபந்தனைகள், வட்டி விகிதங்கள் / கட்டணங்கள் குறித்த தகவல்கள் தெளிவாக விளக்கப்படுவதை வங்கி உறுதிப்படுத்த வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் / சேவைகள் என்னென்ன, அவற்றை எப்படிப் பெறுவது, தனது சந்தேகங்களுக்கு யாரை எப்படித் தொடர்புகொண்டு பதில் பெறுவது போன்றவை குறித்த தகவல்களை வங்கி அளிக்க வேண்டும்.

**கடன் தொகையை ரிலீஸ் செய்தல்**

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கடன்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு குறித்த காலத்தில் ரிலீஸ் செய்யப்படுவதை வங்கி உறுதி செய்ய வேண்டும். வட்டி விகிதத்தில் மாற்றம் மற்றும் அதுபோன்ற பிற சேவைக் கட்டணங்களில் மாற்றம் உள்ளிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றம் எதாவது இருந்தால் அவை எதிர்காலத்தில் மட்டுமே செயல்படுத்தப்படும் என்பதை வங்கி தெரியப்படுத்த வேண்டும்.

கடன் தொகையை ரிலீஸ் செய்யும்போது, கடன் பெற்றவருக்கு உண்மையான சிரமங்கள் ஏதேனும் இருந்தால் அதைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக ரூ.2 லட்சம் வரையிலான கடன் தொகையை ரிலீஸ் செய்த பிறகான ஆக்கப்பூர்வமான கண்காணிப்பு செயல்முறையை வங்கி கொண்டிருக்க வேண்டும். கடன் தொகையை திரும்பப் பெற / விரைவுபடுத்த அல்லது கடன் ஆவணத்தின் கீழான செயல்பாடு அல்லது கடன் வாங்கியவருக்கு உரிய தகவல் கொடுத்த பிறகு தேவைப்படும் கூடுதல் பிணையைப் பெறுவதற்கு வங்கி முடிவு எடுத்துக்கொள்ளலாம். கடன் நிலுவையை வசூலிப்பதிலும், பிணையமாகக் கொடுக்கப்பட்ட சொத்துகளைக் கையகப்படுத்துவதிலும் நியாயமான நடவடிகைகளை மேற்கொள்வதன் மூலம், வாடிக்கையாளரின் நன்மதிப்பையும், நீண்ட கால உறவையும் பெற முடியும் என்று வங்கி நம்புகிறது. ஆகவே, கடன் நிலுவையைத் திரும்பப் பெறும் முயற்சியில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படாது என்பதை வங்கி உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறது.

**கடன் திட்டங்களுக்கான கட்டணங்கள்**

கடன் விண்ணப்பத்தைப் பரிசீலிக்க ஆகும் கட்டணம், கடன் நிராகரிக்கப்பட்டால் கட்டணம் திருப்பித் தரப்படுமா, கடன் தொகையை முன்கூட்டியே செலுத்துவதற்கான வாய்ப்புகள் மற்றும் அதற்கான கட்டணம், ஏதேனும் இருந்தால், தாமதமாகச் செலுத்தப்படும் தவணைத் தொகைக்கு அபராதக் கட்டணம், ஏதேனும் இருந்தால், வட்டி விகிதத்தை மாற்றி அமைக்கக்கூடிய விதி மற்றும் கடன் வாங்குபவரைப் பாதிக்கக்கூடிய வேறு ஏதேனும் விஷயங்கள் இருந்தால், அவை குறித்து கடன் ஒப்புதல் கடிதம் / கடன் ஒப்பந்தத்தில், வங்கி தெளிவுபடுத்த வேண்டும்.

வங்கி தனது கடன் திட்டங்களுக்கான வட்டி விகிதங்கள், சேவைக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் குறித்த தகவல்களை இணையத்தளத்தில் தெரிவிக்க வேண்டும். வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் கட்டணங்கள் குறித்த

பட்டியலின் ஒரு பிரதி இருக்க வேண்டும் என்பதுடன், அது குறித்த தகவல் பொதுவான அறிவிப்புப் பலகையிலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

மற்ற நிதி நிறுவனங்களின் கடன் திட்டங்களுக்கான கட்டண விகிதங்களை வாடிக்கையாளர் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வசதியாக, "ஆல்-இன்-காஸ்ட்" என்ற வாய்ப்பை வங்கி வழங்குவதுடன், அத்தகைய கட்டணங்கள் எந்தவிதப் பாகுபாடும் அற்றவை என்பதையும் வங்கி உறுதி செய்ய வேண்டும். வாடிக்கையாளர் அவர் வாங்கிய கடன் மீதான வட்டி விகிதத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து கடிதம், மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி (SMS) மூலமாகத் தெரிவிக்க வேண்டும்.

**பிற வங்கிகளுக்கு கடன்களை மாற்றிக்கொள்ளுதல்**

வேறு ஏதேனும் வங்கி / நிதி நிறுவனங்களுக்கு கடன்களை மாற்றிக்கொள்ளப்பட்டால், அந்தக் கடன் கணக்கு குறித்து வங்கிக்கு ஏதேனும் ஆட்சேபம் இருந்தால், கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட 21 நாட்களுக்குள் அதைத் தெரிவிக்க வேண்டும்.

**கடன் நிலுவைத் தொகையை வசூலித்தல்**

கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் நடவடிக்கையில், வாடிக்கையாளர்களை தேவையற்ற முறையில் துன்புறுத்தக் கூடாது. அதாவது, அகால நேரங்களில் வாடிக்கையாளரை அடிக்கடி தொந்தரவு செய்வது, கடன் தொகையை வசூலிக்க ஆள் பலத்தைப் பிரயோகிப்பது போன்றவை. முறையான வகையில் எழுத்துப்பூர்வமான நோட்டீஸ் கொடுக்காமல், கடனுக்காக பிணையாகக் கொடுக்கப்பட்ட சொத்துகளை கையகப்படுத்தும் முயற்சிகளிலோ, எந்தவிதமான சட்டரீதியான நடவடிக்கைகளையோ வங்கி ஒருபோதும் மேற்கொள்ளக் கூடாது.

வங்கியின் கடன் மீட்பு அணுகுமுறை நியாயமாகவும், பாரபட்சமற்றதாகவும் இருக்க வேண்டும். நேர்மையாக நடந்துகொள்வதும், கனிவாகப் பேசுவதும் கடன் மீட்பு அணுகுமுறையில் பின்பற்ற வேண்டிய அடிப்படை அம்சங்கள். கடனை மறுகட்டமைப்பு / மறுசீரமைப்பு செய்யவோ முடியாது அல்லது சாத்தியம் இல்லாமல் போனாலோ மட்டுமே, பிணையாகக் கொடுக்கப்பட்ட சொத்துகளைக் கையகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். சொத்துகளைக் கையகப்படுத்தும் முயற்சியில் சட்டரீதியான நடவடிக்கைகளையே வங்கி பின்பற்ற வேண்டும்.

கடன்களைத் திரும்பப் பெறுவது தொடர்பான நியாயமான நடைமுறைகள், வங்கியின் இணையத்தளத்தில் "கடன் நிலுவையை வசூலித்தல் மற்றும் பிணைச் சொத்துகளைக் கையகப்படுத்துதல்" பாலிசியின் கீழ் மேலும் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**மாற்றிக்கொள்ளத்தக்க வட்டி விகித முறை கடன்களை முன்கூட்டியே செலுத்துவதற்கான கட்டணங்கள் / அபராதம்**

ரிசர்வ் வங்கி வெளியிட்ட DBOD.No.Dir.BC.107/13.03.00/2011-12 dated June 5, 2012 மற்றும் DBOD.Dir.BC.No.110/13.03.00/2013-14 dated May 7, 2014 ஆகிய இரண்டு சுற்றறிக்கைகளின் அடிப்படையில், இணைக்-கடனாளி(கள்) இருக்கும் அல்லது இல்லாத தனி நபருக்கு தொழில் அல்லாத பிற தேவைகளுக்காக, மாற்றிக்கொள்ளத்தக்க வட்டி விகித முறையில் (Floating Rate Term) வழங்கப்பட்ட கடன்களை முன்கூட்டியே செலுத்துவதற்குக் கட்டணமோ, முன்கூட்டியே செலுத்தியதற்கான அபராதமோ விதிக்கப்படமாட்டாது.

**கடன்கள் மீது கொடுக்கப்பட்ட பிணைச் சொத்துகளை விடுவித்தல்**

கடன் தொகை முழுமையாகப் பெறப்பட்ட பிறகு அல்லது சட்டரீதியான நடவடிக்கை மூலம் கடன் தொகை பெறப்பட்ட பிறகு அல்லது கடன் பெற்றவருக்கு எதிராக வங்கி வேறு எதாவது பிணையைப் பெற்ற பிறகு, கடனுக்கு ஈடாகக் கொடுக்கப்பட்ட பிணைச் சொத்துகளை வங்கி விடுவிக்கும். கடன் தொகை முழுமையாகச் செலுத்தப்பட்ட 15 நாட்களுக்குள் அதற்குப் பிணையாகக் கொடுக்கப்பட்ட அனைத்து வகையான சொத்து ஆவணங்களையும் வாடிக்கையாளர்களிடம் வங்கி திருப்பிக் கொடுக்கும். சில கடன்களை இருக்கும் நிலையிலேயே (right to set off) வைத்துக்கொள்ள வங்கி முடிவு செய்தால், அது குறித்து சம்பந்தப்பட்ட கடன்தாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பும். அந்த நோட்டீஸில், வங்கிக்கு வர வேண்டிய கடன் தொகை, அந்தத் தொகைக்கு ஈடாக வங்கியிடம் இருக்கும் பிணைச் சொத்துகளின் விவரங்கள் இருக்கும். கடன் தொகை முழுமையாகச் செலுத்தும் வரை அவை வங்கியிடமே இருக்கும்.

**வாடிக்கையாளர் குறைகளைத் தீர்த்தல்**

கடன் வாங்கியவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான ஒரு செயல்முறையை வங்கி உருவாக்கியுள்ளது. வாடிக்கையாளர் குறைதீர் கொள்கை என்ற தலைப்பில் வங்கியின் இணையத்தளத்தில் இதுகுறித்து விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. வங்கியின் கிளைகளிலும் இவை கிடைக்கும்.

கடன் வழங்குபவர்களுக்கான நியாயமான நெறிமுறைகள் (FPC) மற்றும் வாடிக்கையாளர் குறை தீர்க்கும் செயல்முறையோடு இணைந்த ஆண்டு மதிப்பாய்வு அறிக்கை, வங்கியின் வாடிக்கையாளர் சேவை கமிட்டியிடம் வழங்கப்படும்.

**2022 மார்ச் 14, குறுங்கடன் ஒழுங்குமுறை கட்டமைப்பின் முதன்மை வழிகாட்டுதலின் அடிப்படையில் கடன் வழங்குபவர்களுக்கான நியாயமான நடைமுறைகளின் மேம்பாடு**

மேற்குறிப்பிட்ட முதன்மை வழிகாட்டுதலின்படி, குறுங்கடன் என்பது, ஆண்டு வருமானம் ரூ.3,00,000 வரை உள்ள குடும்பத்துக்கு எந்தப் பிணையும் இல்லாமல் கொடுக்கப்படுவது. குறுங்கடன் கொடுக்க, வங்கிகள் பின்பற்ற முதன்மை வழிகாட்டுதல் வரையறுத்துள்ள நெறிமுறைகள்:

1. கடன் தொடர்பான தகவல்கள், கட்டணங்கள் உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய ஒரு முழுமையான விரிவான தகவல் பட்டியலை வங்கி தயாரித்து, அதை கடன் கேட்டு வருபவருக்குக் கொடுக்க வேண்டும். (பார்க்க இணைப்பு 1).

2. வங்கி மற்றும் / அல்லது அதன் பங்குதாரர் / முகவரால், குறுங்கடன் பெறுபவரிடம் இருந்து வசூலிக்கப்படும் எந்த ஒரு கட்டணமும் விரிவான தகவல் பட்டியலில் குறிப்பிடப்படும். அந்தப் பட்டியலில் குறிப்பிடப்படாத வேறு எந்தக் கட்டணமும் சம்பந்தப்பட்ட நபரிடம் இருந்து வசூலிக்கப்படாது.

3. குறுங்கடன்களை முன்கூட்டியே செலுத்தினால் அதற்கு அபராதக் கட்டணம் கிடையாது. அப்படி ஏதாவது அபராதக் கட்டணம் வசூலிக்கப்பட்டால், அது தாமதமாகச் செலுத்திய தவணைத் தொகைக்குத்தானே தவிர, மொத்தக் கடனுக்குமானது கிடையாது.

4. குறுங்கடன்களுக்கான குறைந்தபட்ச, அதிகபட்ச மற்றும் சராசரியான வட்டி விகிதங்களை வங்கி தனது அனைத்துக் கிளைகளிலும், தகவல் குறிப்பேடுகள் / நோட்டீஸ்களிலும், இணையத்தளத்திலும் வெளியிடும்.

5. வட்டி விகிதத்தில் மாற்றம் குறித்தோ அல்லது வேறு ஏதாவது கட்டணமோ வாடிக்கையாளர் செலுத்த வேண்டும் என்றாலோ, அதுகுறித்து சம்பந்தப்பட்ட நபருக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிப்பதுடன், அந்த மாற்றம் எதிர்காலத்தில் மட்டுமே செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

6. கடன் பெறுவர் படித்துப் புரிந்துகொள்ளும் மொழியிலேயே குறுங்கடன்களுக்கான நிலையான ஒப்பந்தப் படிவங்கள் இருக்கும்.

7. கடன் வாங்கியவருக்குக் கடன் அட்டை (loan card) ஒன்றை வங்கி தரும். அதில், தொடர்புடைய நோடல் அதிகாரியின் பெயர், தொடர்பு எண், கடன் வாங்கியவரின் தகவல்கள், கடன் குறித்த தகவல்கள், கடனோடு தொடர்புடைய விதிமுறைகள், நிபந்தனைகள், செலுத்தப்பட்ட தவணைகளுக்கான வங்கியின் ஒப்புதல்கள், செலுத்தப்பட்ட தவணைத் தொகைகள் பற்றிய தகவல்கள், கடைசியாகச் செலுத்திய தொகை, நுகர்வோர் குறைதீர் முறை குறித்த தகவல்கள் என அனைத்தும் இடம் பெற்றிருக்கும்.

8. கடன் வாங்கியவர் புரிந்துகொள்ளும் மொழியிலேயே அனைத்துத் தகவல்களும் கடன் அட்டையில் பதிவு செய்யப்படும்.

9. வாடிக்கையாளருக்குக் கடன் அல்லாத சேவைகளை வழங்குவதாக இருந்தால், அது அவருடைய ஒப்புதலுடன்தான் வழங்க வேண்டும். அத்தகைய சேவைகளுக்கான கட்டண விவரங்களும் கடன் அட்டை மூலமாகவே வாடிக்கையாளருக்குத் தெளிவான முறையில் தெரியப்படுத்த வேண்டும்.

10. வங்கி ஊழியரோ அல்லது வெளி ஏஜென்ஸி ஊழியர்களோ வாடிக்கையாளரிடம் தவறான முறையில் நடந்துகொண்டிருந்தால், அதற்கு வங்கிதான் முழுப் பொறுப்பு. பாதிக்கப்பட்ட நபரின் குறைகள் உடனடியாகத் தீர்க்கப்படுவதுடன், அது குறித்து லோன் ஒப்பந்தத்திலும் குறிப்பிட வேண்டும். மேலும், வங்கியின் இணையத்தளம், வங்கிக் கிளை / அலுவலகத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

11. வங்கியின் வசூல் நெறிமுறைகள் வங்கியின் கலெக்ஷன் பாலிசியுடன் பொருந்துவதாக இருக்க வேண்டும்.

இணைப்பு 1:

**குறுங்கடன்கள் வழங்குவதற்கான விரிவான தகவல் பட்டியல்**
(கடன் வாங்குபவர் புரிந்துகொள்ளும் மொழியில் இருக்க வேண்டும்)

**தேதி: XXX** **கடன் கொடுத்தவர் பெயர்: XXX** **விண்ணப்பதாரர் பெயர்: XXX**

| வ. எண். | தகவல்கள் | விவரம் |
|---|---|---|
| (i) | கடன் தொகை (கடன் பெற்றவரிடம் கொடுக்கப்பட்ட தொகை) (ரூபாயில்) | |
| (ii) | தவணைக் காலம் முழுவதும் செலுத்த வேண்டிய மொத்த வட்டித் தொகை (ரூபாயில்) | |
| (iii) | பிற முன்கூட்டியே செலுத்தும் கட்டணங்கள் (தனித்தனியாகக் கீழே குறிப்பிட வேண்டும்) (ரூபாயில்) | |
| (a) | பரிசீலனைக் கட்டணம் (ரூபாயில்) | |
| (b) | காப்பீட்டுக் கட்டணம் (ரூபாயில்) | |
| (c) | பிற (ரூபாயில்) | |
| (iv) | வழங்கப்பட்ட நிகர தொகை ((i), (iii)) (ரூபாயில்) | |
| (v) | கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய மொத்த தொகை (கூட்டுத் தொகை (i), (ii) and (iii)) (ரூபாயில்) | |
| (vi) | ஆண்டு வட்டி விகிதம் (சதவீதத்தில்) (IRR அணுகுமுறை மற்றும் குறையக்கூடிய அசல் முறையைப் பயன்படுத்தி, வழங்கப்பட்ட நிகர தொகை கணக்கிடப்பட்டுள்ளது). | |
| (vii) | கடன் காலம் (மாதங்களில்) | |
| (viii) | திருப்பிச் செலுத்தும் விதம் | |
| (ix) | திருப்பிச் செலுத்தும் தவணைகள் | |
| (x) | மாதாந்திர தவணைத் தொகை (ரூபாயில்) | |
| **தற்செயல் கட்டணங்கள் பற்றிய தகவல்கள்** | | |
| (xi) | எந்த நேரத்திலும் முன்கூட்டியே கடனைத் செலுத்துவதால் எந்த அபராதமும் கிடையாது. | |
| (xii) | தாமதமான கட்டணத்துக்கு மட்டுமே அபராதம் வசூலிக்கப்படும். (அப்படி எதாவது இருந்தால்) | |
| (xiii) | மற்ற கட்டணங்கள் (அப்படி எதாவது இருந்தால்) | |

**விரிவான பணம் செலுத்தும் அட்டவணை**

| தவணை எண். | செலுத்த வேண்டிய அசல் (ரூபாயில்) | அசல் (ரூபாயில்) | வட்டி (ரூபாயில்) | தவணைத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|